# பாரம்பரிய விளையாட்டுக்கள்

# II



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# விளையாட்டுக்கள்

உலகில் உள்ள அனைவருக்கும் பிடித்த ஒன்று விளையாட்டு ஆகும். விளையாட்டு என்றவுடன் குழந்தைகளின் நினைவுக்கு வருவது மகிழ்ச்சி மட்டுமே. ஆட்டம் பாட்டம் வரிசையில் ஓட்டத்திற்கும் இடம் கொடுப்பது தான் விளையாட்டு. விளையாட்டிற்கான இலக்கண வரையறை எதுவும் கிடையாது. தொல்காப்பியர் மெய்ப்பாடுகள் குறித்து கூறுகையில், உவகை (மகிழ்ச்சி) எனும் உணர்வு விளையாட்டின் காரணமாக வெளிப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். இதன் மகத்துவத்தை உணர்ந்த பாரதியார்,

**ஓடி விளையாடு பாப்பா! - நீ**
**ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!**
**கூடிவிளையாடு பாப்பா!**

என்று பாடியுள்ளார். ஒருவர் விளையாட்டில் ஈடுபடும் பொழுது தான் அவருடைய பொறுமை, நேர்மை, ஒழுக்கம், கீழ்ப்படிதல் ஆகிய நற்குணங்களைக் கண்டறிய இயலும் என உளவியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். குழந்தைகள் படிப்பைக் காட்டிலும் விளையாட்டில் தனிக்கவனம் செலுத்துவதை நம் அன்றாட வாழ்வில் காணலாம். பள்ளி, கல்லூரிகளில் படிப்புடன் விருப்பப் பாடமாக விளையாட்டும் கற்றுத் தரப்படுகிறது. பொழுதுபோக்கிற்காக உருவாக்கப்பட்ட விளையாட்டு காலப்போக்கில் நேரமின்மைக் காரணத்தால் காணாமலே போய்விட்டது. வெட்ட வெளிகளில், தெருக்களில் கூட்டம் கூட்டமாக விளையாடிய மழலைச் செல்வங்கள் இன்று வீடு எனும் கூண்டிற்குள் அடைபட்டு கிடப்பதைக் காணலாம். வளர்ந்து வரும் நாகரிகமும் பெற்றோர்களின் மிகுதியான வேலைப் பளுவும், குழந்தைகள் நலனில், கவனச் சிதறலை ஏற்படுத்தியுள்ளன. அதனால் குழந்தைகளுக்குரிய முழுநேரத்தையும் படிப்பிற்கு மட்டுமே செலவிடுகின்றனர். உடற்கல்வியைப் புறக்கணித்து விடுகின்றனர்.

பள்ளி விட்டு வீடு திரும்பும் குழந்தைகள் புத்தகப் பையினை வைத்துவிட்டு விளையாடச் செல்லும் தருணம் மிகவும் மகிழ்ச்சியானதாகும். விளையாட்டு இன்றளவும் விளையாடப்படுகிறது. அதற்கான இடம், காலம், கருவி ஆகியவை மட்டும் வேறுபடுகிறது.

நினைத்த நேரங்களில் நினைத்த இடங்களில் விளையாடிய நிலை மாறி, கிடைத்த நேரங்களில் வீட்டிற்குள் இருந்து கொண்டு, கணினி, அலைபேசிகளில் கோபப் பறவைகள் (Angry Birds) சிலந்தி மனிதன் (Spider Man), நொறுக்கு மிட்டாய் (Candy Crush), சாகச விளையாட்டு (Adventure Game) போன்ற பயனற்ற விளையாட்டுக்களை விளையாடுகின்றனர். இதனால் சிறுவயதிலேயே குழந்தைகளுக்கு உடல் பருமன், சோர்வு நிலை, மன அழுத்தம் போன்ற நோய்கள் உண்டாகின்றன. இரவு நேரங்களில் விளையாடுவதால் கண் பார்வைக் குறைபாடு ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. ஆனால் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்கள் வெயில், மழை எனப் பாராமல் மணல் தரைகளில், நீர் நிலைகளில் விளையாடப்பட்டன. இவற்றால் குழந்தைகளுக்கு நோய்நொடிகள் ஏற்படவில்லை. மாறாக உடலுக்குத் தேவையான நோய் எதிர்ப்பு ஆற்றலும் பயிற்சியும் கிடைத்தன. மேலும் உடலுக்கு வலுவூட்டல், வளைந்து கொடுக்கும் தன்மை, தைரியம், விரைவாக செயலாற்றும் பண்பு, மன சக்தி, அறிவுத்திறன் மேம்பாடு, மனக்கூர்மை, படைப்பாற்றல் மற்றும் நினைவாற்றல் மேம்பாடு ஆகிய அம்சங்களையும் கொண்டதாக, நம் பாரம்பரிய விளையாட்டுக்கள் அமைந்துள்ளன. இவையாவும் இன்றைய குழந்தைகளுக்குக் கிடைப்பது இல்லை.

நுங்கு வண்டி, கண்ணாமூச்சி, கோலிக்குண்டு, நொண்டி, தட்டாங்கல், கிட்டி, பம்பரம் முதலிய பாரம்பரிய விளையாட்டுக்கள் சிறுவர்களுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் தரவல்லனவாகும். குறிப்பாக சிலம்பாட்டம், சிங்கம்புலி ஆட்டம், இளவட்டக்கல் தூக்குதல், உரி அடித்தல் போன்ற விளையாட்டுக்கள் உடலுக்கு வலிமையைத் தருவதோடு தன்னம்பிக்கையையும் அளிக்கின்றது. குழந்தைகளிடையே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, நட்புடன் பழகும் பண்பு மற்றும் ஒற்றுமை உணர்வு மேலோங்கவும் வழி செய்கின்றது. விளையாட்டுப் பொருட்களைச் சிறுவர்களே உருவாக்குவதால் அவர்களின் கற்பனைத் திறனும் படைப்பாற்றலும் அதிகரிக்கின்றது. நடுவர், விளையாடுபவர் மற்றும் வேடிக்கை பார்ப்பவர் ஆகிய அனைவரையும் ஒன்றிணைக்கும் விதமாக பாரம்பரிய விளையாட்டுக்கள் அமைந்துள்ளன. இத்தகு சிறப்புகளை உடைய தொன்மையான விளையாட்டுக்களையும் அவற்றை விளையாடும் விதிமுறைகளையும் பற்றி அறிவோம்.

# பாரம்பரிய விளையாட்டுக்கள்

1. கபடி
2. தாயம்
3. பல்லாங்குழி
4. கொக்கு பற பற
5. திருடன் போலீஸ்
6. கொல கொலயா முந்திரிக்கா
7. ஒத்தையா ரெட்டையா
8. எலியும் பூனையும்
9. காற்றாடி
10. சிலம்பாட்டம்

## கபடி :

★ எண்ணிக்கை 14 (2 அணி) ஒரு அணிக்கு 7 நபர்கள்

★ 40 நிமிடம் (20+20 நிமிடங்கள்), நடுவே 5 நிமிட இடைவேளை



# விதிமுறைகள் :

ஒரு வீரர் எதிர் அணியில் உள்ளவரை தொடச்செல்லும் போது ஏதாவது ஒரு வார்த்தையைக் கூறிக்கொண்டே இருக்க வேண்டும். அதில் ஒரு நபரைத் தொட்டு விட்டு மீண்டும் அவர் அணிக்குத் திரும்ப வேண்டும். திரும்பவில்லை என்றால் அவர் தோற்றவர் என்று அறிவிக்கப்படுவார். இதே போல் இரண்டு அணியில் உள்ளவரும் விளையாட வேண்டும். முடிவில் எந்த அணி வீரர்கள் அதிக நபர்களைத் தொட்டு விட்டு தனது அணிக்குத் திரும்புகிறார்களோ அவர்களே வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார்கள்.

## தாயம்:

*எண்ணிக்கை – 4 நபர்கள்

## விதிமுறைகள்:

விளையாட்டை ஆரம்பிக்கும் பொழுது தாயம் போட்டு நான்கு நபர்களும் ஒவ்வொரு காய்களாக இறக்கிக் கொள்ளலாம். வலது கை பக்கமாகவே காய்களை நகர்த்தி உள்ளே கொண்டு செல்ல வேண்டும்.



1, 5, 6 அல்லது 12 போன்ற குறிப்பிட்ட எண்கள் வந்தால், மீண்டும் இன்னொரு முறை உருட்டிக் கொள்ளலாம். பாதுகாப்புப் பகுதி (X) இல்லாத இடங்களில் மற்றவர் காய்கள் இருந்தால் நாம் அதனை வெட்டிக் கொள்ளலாம்.

சில இடங்களில் பாதுகாப்புப் பகுதிகள் இருக்கும். அங்கு நாம் யாரையும் வெட்ட முடியாது. நாம் காய்களை சுற்றிக் கொண்டே நடுப்பகுதியில் பாதுகாப்புப் பகுதிக்குச் (X) செல்ல வேண்டும். இதனைப் பழம் என்று கூறுவர். இதில் யாருடைய காய்கள் அதிகமாக இருக்கிறதோ அவர்கள் வெற்றி பெற்றவர்.

# பல்லாங்குழி:

★ எண்ணிக்கை – 2 நபர்கள் [ ஒரு குழிக்கு 5 முத்துக்கள்]

# விதிமுறைகள்:

14 குழிகள் கொண்ட பல்லாங்குழிப் பலகை ஒன்றை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு குழிக்கு 5 முத்துகள் வீதம் 14 குழிகளிலும் நிரப்ப வேண்டும். முதல் நபர் தனக்கு ஒதுக்கப்பட்ட 7 குழிகளில், ஏதாவது ஒரு குழியிலுள்ள 5 முத்துகளை எடுத்து, வலப் பக்கமாக ஒவ்வொரு குழியிலும் ஒரு முத்து போட வேண்டும். 5 முத்துகளையும் போட்ட பிறகு, 6–வது குழியிலிருக்கும் முத்துகளை எடுத்து, அடுத்த குழியிலிருந்து போட்டுக்கொண்டே வரவேண்டும். இப்படித் தொடர்ந்து போட்டுக்கொண்டே வரும்போது, இருவரில் யார் குழியிலாவது நான்கு முத்துகள் சேர்ந்துவிட்டால், அந்தக் குழிக்கு உரியவர் ‘பசு’ என்று சொல்லிவிட்டு, எடுத்துக்கொள்ளலாம்.



கையிலிருக்கும் கடைசி முத்தைப் போட்ட பிறகு, அடுத்த குழியில் முத்து எதுவும் இல்லாமல் காலியாக இருந்தால், அதற்கடுத்த குழியிலுள்ள முத்துகள் அத்தனையும் எடுத்துக்கொள்ளலாம். இரண்டு குழிகள் அடுத்தடுத்து காலியாக இருந்தால், அவரது ஆட்டம் முடிந்துவிடும். அடுத்தவர் தொடர வேண்டும். இருவரும் மாறிமாறி விளையாடுவர். முடிவில் யாரிடம் அதிக முத்துகள் இருக்கிறதோ அவரே வெற்றி பெற்றவர்.

# 4. கொக்கு பற பற

தலைப்பைப் படித்ததும், என்னடா விளையாட்டு சொல்லித் தருவதாகச் சொல்லிட்டு, பாட்டுப் பாடுவதாக நினைக்கிறீர்களா? இதுவும் விளையாட்டுத்தான். உங்க தாத்தா, பாட்டி சின்ன வயதில் விளையாடி மகிழ்ந்த ஒரு விளையாட்டின் பெயர்தான். சிறுவர் சிறுமியர் எத்தனை பேர் வேண்டுமென்றாலும் தரையில் வட்டமாக அமர்ந்து கொண்டு விளையாடும் விளையாட்டு.



## விளையாடும் முறை:-

இந்த விளையாட்டில் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பர். முதலில் விளையாடுபவர்கள் அனைவரும் வட்டமாக உட்கார்ந்துகொள்ள வேண்டும். இந்தப் போட்டிக்கெனத் தேர்வு செய்யப்பட்ட தலைவர் வட்டத்திற்கு நடுவில் நின்று கொள்ள வேண்டும். உட்கார்ந்திருப்பவர்களில் சட்டென யார் முன்பாவது கையை நீட்டி, “கோழி பற… பற…” என்று தலைவர் சொல்ல வேண்டும். தலைவர் கையை நீட்டிய இடத்தில் யார் இருக்கிறார்களோ அவர்கள், “கோழி பற… பற…” என்று உடனடியாகத் திரும்பச் சொல்ல வேண்டும். பிறகு, உட்கார்ந்திருக்கும் எல்லோரும் ஒருமுறை “கோழி பற… பற…” என்று சொல்ல வேண்டும். இப்படி வேகமாக விளையாடிக் கொண்டிருக்கும்போதே, திடீரெனத் தலைவர் யாரிடமாவது, “நாய் பற… பற…” என்று சொல்ல, கேட்டவரும் “நாய் பற… பற…” என்று சொல்லிவிட்டால், அவர் ‘அவுட்’. இப்போது, ‘அவுட்’ ஆனவர் தலைவராக நின்று, மற்றவர்களிடம் இந்த விளையாட்டை நடத்த வேண்டும். இதில், பறவையின் பெயரைச் சொல்லும்போது “பற… பற…” என்றும், விலங்குகளின் பெயரைச் சொல்லும்போது “வர… வர…” என்றும் சொல்லி விளையாட வேண்டும்.

# 5. திருடன் போலீஸ்



ஆண், பெண் ஆகிய இருபாலரும் இந்த விளையாட்டினை தரையில் வட்டமாக அமர்ந்துகொண்டு விளையாடுவார்கள். இதனைக் ‘கள்ளன் போலீஸ் விளையாட்டு’ என்றும் அழைப்பர். இந்த விளையாட்டில் மொத்தம் ஐந்து பேர் கலந்து கொள்ளலாம்.

**விளையாடும் முறை:**




முதலில் சதுர வடிவமாக காகிதத் தாளை வெட்டிக் கொள்வர். அந்த காகிதத் தாளின் மீது இராஜா, ராணி, மந்திரி, போலீஸ், திருடன் போன்ற பெயர்களை எழுதி, ஒவ்வொரு பெயருக்கும் குறிப்பிட்ட மதிப்பெண்களை வழங்குவர். உதாரணமாக ராஜாவிற்கு 1000, ராணிக்கு 500, மந்திரிக்கு 300, போலீஸ்க்கு 100, திருடனுக்கு 0 என மதிப்பெண் கொடுத்து அந்தச் சீட்டை மடித்து வைத்துக் கொள்வார்கள். பின்னர் எழுதிய காகிதத் தாளினை தரையில் போட்டு, ஆளுக்கொரு காகிதச் சீட்டினை எடுத்துக் கொள்வர்.



பின்பு யார் கையில் போலீஸ் உள்ளது எனக் கேட்பர். போலீஸ் சீட்டு உள்ளவர், திருடன் யார்? என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். மற்ற நால்வரும் திருடனைக் கண்டுபிடிக்கும் வரை அமைதியாக இருப்பார்கள். போலீஸ், மற்ற நால்வரின் முகப்பாவனையை வைத்து திருடனை அடையாளம் காண வேண்டும். அவ்வாறு திருடனைக் கண்டுபிடித்துவிட்டால், கண்டுபிடித்தவருக்கு (போலீஸ்), 100 மதிப்பெண்ணும் திருடனுக்கு 0 மதிப்பெண்ணும் வழங்கப்படும். அவ்வாறு போலீஸ் திருடனைக் கண்டுபிடிக்காவிட்டால் திருடனுக்கு 100 மதிப்பெண்ணும் போலீஸ்க்கு 0 மதிப்பெண்ணும் வழங்கப்படும். ஒரு கையேடு ஒன்றில், விளையாடும் நபர்களின் பெயர்களையும், அவர்கள் பெற்ற மதிப்பெண்களையும் எழுதி வைத்துக் கொள்வர். ஒவ்வொருவரும் விளையாடும்போது மதிப்பெண்களைக் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். விளையாட்டு முடிந்தவுடன் மொத்த மதிப்பெண்களையும் கூட்டுவர். யார் அதிக மதிப்பெண்கள் எடுக்கிறாரோ அவரே இறுதியில் வெற்றி பெற்றவர் ஆவார்.

**சிறப்புகள்:**

குழந்தைகளின் பகுத்தறிவுத் திறனை வளர்க்கிறது. ஒருவரின் முகத்தைப் பார்த்து அவரின் மனநிலையைக் கணிக்கும் உளவியல் பயிற்சியைக் கொடுக்கிறது.

* * *

# 6. கொல கொலயா முந்திரிக்கா

குழந்தைகள், பள்ளி விடுமுறை நாட்களில் தெருவில் ஒரே கூச்சல் கும்மாளமாக ஆர்ப்பாட்டத்துடன் விளையாடுவார்கள். ஆண், பெண் ஆகிய இருபாலரும் தரையில் வட்டமாக அமர்ந்து கொண்டு விளையாடும் விளையாட்டு. இந்த விளையாட்டில் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பர். தலைவர், துணியைக் கையில் வைத்துக்கொண்டு வட்டத்தில் உட்கார்ந்து இருப்பவர்களைச் சுற்றி வர வேண்டும். அப்பொழுது



"கொல கொலயா முந்திரிக்கா
நிறைய நிறைய சுத்திவா
கொல கொலயா முந்திரிக்கா
கோலார்பட்டிக் கத்திரிக்கா
கொல கொலயா முந்திரிக்கா
கொழ(குழை)ஞ்சு போச்சு கத்திரிக்கா."

என்ற பாடலைப் பாடிக்கொண்டே ஓட வேண்டும். பின்பு ஓடுபவர் பாடலை நிறுத்திவிட்டு கீழே உட்கார்ந்து இருப்பவர்கள் மீது துணியைப் போடுவார். துணி யார் மீது விழுகிறதோ அவர் வட்டத்தினைச் சுற்றி வர வேண்டும். சுற்றி வந்தவர் எழுந்தவர் இடத்தில் அமர்ந்து கொள்ள வேண்டும். கீழே அமர்ந்து இருந்தவர் மீண்டும் வட்டத்தைச் சுற்றி வர ஆட்டம், தொடக்கத்தில் இருந்து இறுதி வரைக்கும் விறுவிறுப்பாகக் குதூகலத்துடன் விளையாடப்படும்.

**சிறப்பு:**

குழந்தைகளுக்குப் புத்துணர்ச்சியைக் கொடுக்கிறது.

* * *

# 7. ஒத்தையா! ரெட்டையா!



புளியம் முத்துகள் அல்லது சிறிய கற்களை வைத்து இருவர் மட்டும் அமர்ந்து விளையாடும் விளையாட்டு. இது முத்துகளின் எண்ணிக்கை அடிப்படையில் விளையாடப்படும்.

**விளையாடும் முறை:**

இந்த விளையாட்டிற்கு மொத்தம் 100 அல்லது 150 முத்துகள் தேவைப்படும். இவை இருவருக்கும் சரி நிகராகப் பிரித்துக் கொடுக்கப்படும். இவற்றில் உள்ள முத்துகளைக் குறிப்பிட்ட அளவு கையில் எடுத்துக் கொண்டு எதிரே உள்ளவரிடம் கையில் உள்ள முத்துகள் ஒன்றா! இரண்டா! என்று கேட்பார்கள். அவர்கள் சொல்லும் பதில் சரியாக இருந்தால் முத்துகள் எதிர் அணிக்கே சொந்தம். சில நேரம் கையில் ஐந்து அல்லது ஆறு முத்துகள் இருக்கும். எதிரே இருப்பவர் தவறாகக் கூறினால் முத்துகள் அனைத்தும் விளையாடுபவரே வைத்துக்கொள்வார். கையில் முத்துகள் இல்லாமல் வெற்று கையாகக் கூட ஏமாற்றி விளையாடுவார்கள். இதனை 'ஊமக்கை' என்று கூறுவர். இவ்வாறு ஒருவரிடம் உள்ள முத்துகள் தீரும் வரை ஆட்டம் தொடர்ந்து விளையாடப்படும்.



ஒற்றை இரட்டை ஊமக்கை

**சிறப்புகள்:**

இந்த விளையாட்டின் மூலம் குழந்தைகள் மனரீதியான பக்குவங்களையும் விளையாட்டின் நுணுக்கங்களையும் கற்றுக்கொள்கின்றனர். மேலும் கணித வல்லமையைப் பெறுகின்றனர்.

* * *

# 8. எலியும் பூனையும்

எலி, பூனை விளையாட்டினை சிறுவர் சிறுமியர்கள் வட்டமாக கை கோர்த்து நின்று விளையாடுவார்கள். ஆடுபவர்களில் ஒருவர் எலியாகவும், மற்றவர் பூனையாகவும் இருப்பார். எலியாக இருப்பவர், பலர் கைகோர்த்து நிற்கும் வட்டத்திற்கு உள்ளேயும் பூனையாக இருப்பவர் வட்டத்திற்கு வெளியேயும் நிற்க வேண்டும். பூனையும், வட்டத்தாரும் பாட்டுப் பாடிக்கொண்டே இருப்பர்.

பூனை: சுண்டெலியைப் பார்த்தீர்களா?
வட்டத்தார்: ஆமாம்.
பூனை: எங்கே?
வட்டத்தார்: வீட்டுக்குள்ளே.
பூனை: வரலாமா?
வட்டத்தார்: வரக்கூடாது.



இவ்வாறு பாடுகையில் 'வரலாம்' என்றால்தான் பூனை உள்ளே நுழையலாம். அப்போதும் உள்ளே நுழைய விடாமல் தடுப்பர். வன்மையாகவோ, தந்திரமாகவோ நுழைந்து பிடிக்க வேண்டும். முட்டி மோதிக்கொண்டு எலியைப் பிடிக்க, அனைவரையும் தள்ளிக் கொண்டு பூனை உள்ளே செல்லும். எலி வட்டத்தை விட்டு வெளியே சென்று விடும். எலியை விரட்டிச் செல்லும் பூனை, ஓடிப்போய் எலியைத் தொட்டுவிட்டால், பூனை வெற்றி பெறும். விளையாட்டு மறுபடியும் தொடரும்.

**சிறப்பு:**

குழந்தைகளின் நடிப்புத் திறமையை வெளிப்படுத்த உதவுகிறது.

* * *

# 9. காற்றாடி



காற்றாடி என்ற வார்த்தையைக் கேட்டவுடன் அனைவரின் மனதில் தோன்றுவது மின்சாரக் காற்றாடியே! ஆனால் பனை ஓலையினால் செய்த காற்றாடியும் முன்பு பயன்பாட்டில் இருந்ததை, தற்காலக் குழந்தைகள் அறிந்திருக்க மாட்டார்கள். அக்காலக் குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களில் ஒன்றாகக் காற்றாடி இருந்தது. தற்காலத்தில் மின்சாரம் தயாரிக்கப் பயன்படும் காற்றாலைகள் உருவாக்கத்திற்கு இந்த காற்றாடியே முன்னோடியாக உள்ளது. இதனைக் 'காத்தாடி' எனவும் வழங்குவர்.

**விளையாடும் முறை** :

நன்கு காய்ந்த பனை ஓலைகளைக் கொண்டு தான் காற்றாடி செய்வார்கள். பனை ஓலைகளை நான்கு சிறு சதுர வடிவங்களாக வெட்டி வைத்துக்கொள்ள வேண்டும். பின்னர் கருவேலம் மரத்தில் உள்ள முள்ளினை எடுத்து, வெட்டி வைத்துள்ள பனை ஓலையின் நடுப்பகுதியில் சொருக வேண்டும். பனை ஓலைக் காற்றாடி தயார் செய்த பின், காற்று அடிக்கும் திசையை நோக்கித் திருப்ப வேண்டும். அப்போது காற்றாடி நன்றாக சுற்றும். ஒரு சில பனைஓலைகள் சுற்றுவதில்லை. அதிக காற்று தேவைப்படுகிறது. ஒரு சில சிறுவர்கள் காற்றாடியைக் கையில் ஏந்திக் கொண்டு ஓடுவார்கள். அவ்வாறு ஓடும் போது காற்றின் வேகத்திற்கு ஏற்ப காற்றாடி 'வெறுவெறு' என்ற சத்தத்துடன் நன்கு சுற்ற ஆரம்பிக்கும். சிறுவர்கள் போட்டி போட்டுக் கொண்டு காற்றாடியை கையில் ஏந்திக் கொண்டு ஒருவரையொருவர் முந்திக் கொண்டு ஓடுவார்கள்.

**சிறப்பு:**

காற்றாடியை சிறுவர்களே தயாரிப்பதால் அவர்களின் கற்பனைத்திறன் வெளிப்படுகிறது.

* * *


# 10. சிலம்பாட்டம்



தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்று சிலம்பாட்டம். முந்தைய காலங்களில் மனிதர்கள் தங்களை விலங்குகளிடம் இருந்து காப்பாற்றிக் கொள்ள கத்தி, கம்பு, தீக்கம்பு போன்ற ஆயுதங்களை வீசி விலங்குகளை விரட்டினர். சிலம்பம் 5000 ஆண்டுகள் பழமையானது. 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அகத்தியமுனிவர் 64 கலைகளில் ஒன்றாகச் சிலம்பத்தைக் குறிப்பிடுகிறார். இது தமிழர்களின் தற்காப்புக் கலை மற்றும் வீர விளையாட்டு ஆகும். இதனைக் 'கம்பு சுற்றுதல்' எனவும் வழங்குவர். கம்புகளைச் சுற்றும் பொழுது உருவாகும் ஒலிகளைக் குறிக்கும் விதமாக 'சிலம்பு' என்ற பெயரும் இதனை ஆடுவதால் சிலம்பாட்டம் எனவும் வழங்கப்பெற்றது.

கோயில் திருவிழாக்களின் பொழுது உறியடித்தல், பாட்டிலில் நீர் நிரப்புதல் போன்ற போட்டிகளுடன் ஜல்லிக்கட்டு, சிலம்பாட்டம் போன்ற விளையாட்டுகளும் போட்டிகளாக நடத்தப்படுகின்றன. சிலம்புடன் வாள், வளரி, சுருள், வெட்டரிவாள் போன்ற ஆயுதங்களுடனும் இந்த ஆட்டம் ஆடப்படுகிறது. அவையாவன;

1. பிரிவுச் சுவடு
2. ஒத்தைச் சுவடு
3. ரெட்டு வீச்சு
4. பூட்டுப் பிரிவு
5. மடு சிரமம்
6. எடுத்தெறிதல்
7. நெடுங்கம்படி
8. கோபட்டா
9. வாள் வீச்சு
10. பீச்சுவா
11. சுருள் பட்டா
12. லேசம்
13. செண்டாயுதம்
14. வளரி
15. இடிகட்டை
16. கட்டாரி
17. கண்டக்கோடாரி
18. வீச்சரிவாள்
19. வெட்டரிவாள்
20. கல்துணி



என்பனவாகும்.

சிலம்பம் தடியைக் கையாளும் முறை, கால் அசைவுகள், உடல் அசைவுகள் மூலம் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதல் எனப் பல கூறுகளைக் கொண்ட விரிவான தற்காப்புக்கலை ஆகும். சிலம்பம் இருமுறைகளில் ஆடப்படுகிறது. அவையாவன;

1. ஒற்றைச் சிலம்புத்தடி கொண்டு இரு கைகளில் பிடித்துச் சுழன்றாடுவது,
2. இரண்டு கைகளிலும் இரண்டு சிலம்பத்தடி கொண்டு ஆடுவது

என்பனவாகும்.

இவற்றில் முதல் முறையே பெரும்பாலான இடங்களில் ஆடப்படுகிறது.



**விளையாடும் முறை:**

சிலம்பம் விளையாட இரண்டு நபர்கள் வேண்டும். தரையில் இருந்து ஒரு மனிதரின் நெற்றி வரையிலுள்ள மூங்கில் கம்பும் தேவைப்படும். சிலம்பாட்டத்தில் எதிராளி வீசும் கம்பினை தடுத்து, எதிராளியின் உடலில் சிலம்புக் கம்பினால் தொடுதல் வேண்டும். அப்படி உடலில் ஏதேனும் ஒரு இடத்தைத் தொட்டுவிட்டால், அவர் தோற்றவர் ஆவார். எதிராளியைச் சிலம்பால் தொட்டவர் வெற்றி பெற்றவர் ஆவார். சிலம்பம் கற்றுக்கொள்ளக் குறைந்தது ஆறு மாத காலம் ஆகும். சிலம்பாட்டப் போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் நன்கு தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும். இன்று சிலம்பாட்டக் கலையினைப் பள்ளி மாணவர்கள் ஆர்வமுடன் கற்றுக்கொள்ள முன் வருகின்றனர். குறிப்பாகப், பெண் பிள்ளைகள் இக்கலையை ஆர்வமாகக் கற்றுவருகின்றனர்.

**சிறப்புகள்:**

உடல் வலிமை பெறவும் நெகிழ்வுத்தன்மை (flexibility) அடையவும் சிலம்பப் பயிற்சி உதவுகிறது.

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com